# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2014-2015

### மானியக் கோரிக்கை எண்.53

**கே.டி. ராஜேந்திரபாலாஜி**
**செய்தி மற்றும் சிறப்புத் திட்டச்**
**செயலாக்கத் துறை அமைச்சர்**

©
தமிழ் நாடு அரசு
2014

# சிறப்புத்  திட்டச் செயலாக்கத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2014–15

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–3 |
| 2. | துறையின் பணிகளும் செயல்பாடுகளும் | 3–6 |
| 3. | கண்காணிப்பு | 6–20 |
| 4. | சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 20–40 |
| 5. | நிறைவுரை | 40–41 |
| | இணைப்பு | |

# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

# கொள்கைக் விளக்கக் குறிப்பு 2014–15

## மானியக் கோரிக்கை எண். 53

### 1. முன்னுரை

நாட்டிலேயே தலை சிறந்த மாநிலமாக தமிழகத்தைத் திகழச் செய்வதுடன்; அமைதி, வளர்ச்சி மற்றும் வளம் என்ற சீர்மிகு பாதையில் தமிழகத்தைக் கொண்டு செல்வதையும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமது தொலைநோக்குத் திட்டமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றார்.

அதனை செயல்படுத்தும் வகையில் அரசு ஏராளமான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பல்வேறு சிறப்பான விலையில்லாத் திட்டங்களான, பொது விநியோகத்

திட்டத்தின் கீழ் அரிசி வழங்கும் திட்டம், ஏழைகளுக்கு கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம், திருமண உதவித் தொகையுடன் திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்க நாணயம் வழங்குதல், பெண் பயனாளிகளுக்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள் வழங்குதல் மற்றும் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்தின் முழுமையான, விரைவான முன்னேற்றத்திற்காக அரசு பல்வேறு கொள்கைகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

அரசின் பல்வேறுவிதமான முதன்மை திட்டங்களை செயல்படுத்துவதற்காகவும், மக்களுக்கு

சிறந்த சேவை மற்றும் சமூகப் பாதுகாப்பு வழங்கிடவும் இவ்வரசால் தனிப்பட்ட கண்காணிப்பு அமைப்பாக சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க முதன்மை திட்டங்களையும், அரசின் அறிவிப்புகளையும் துரிதமாக செயல்படுத்துவதற்காக, தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை செயல்பட்டு வருகிறது.

## 2. துறையின் செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள்:

**2.1** இத்துறையின் முதன்மைச் செயல்பாடுகளும் மற்றும் நடவடிக்கைகளும் பின்வருமாறு:

- தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து, அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்களைத் திறம்படவும், சிறப்பாகவும் செயல்படுத்துவதை ஒருசேர கண்காணித்தல்.
- மாவட்ட அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்குவதற்காக, மாவட்ட அளவில் களஆய்வு மற்றும் களஆய்வுக் கூட்டங்களை குறிப்பிட்ட கால அளவில் நடத்துதல்.
- அரசின் திட்டங்களின் தரம் மற்றும் அளவீடு குறித்து பின்புல அறிக்கையினை வழங்குதல் மற்றும் தேவைப்படும் போது மாற்று வழி முறைகளை அரசுக்கு பரிந்துரைத்தல்.
- மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களால் அளிக்கப்படும் அறிக்கைகளைத் தொகுத்து,

தலைமைச் செயலாளர் வழியாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு காலமுறையில் அனுப்பி வைத்தல்.

- பல்வேறு திட்டங்களில் எதிர்பார்த்த குறிக்கோளினை எட்டுவதற்கு பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து உரிய தேவைக்கேற்ற திட்டங்களையும், வழிகாட்டி நெறிமுறைகளையும் தயாரித்து ஆலோசனை வழங்குதல்.
- அரசின் தேவைக்கேற்ப சிறப்பு அறிக்கைகளை தயாரித்தல்.

**2.2** பல்வேறு சிறப்புத் திட்டங்களின் செயல்பாடுகளைக் கண்காணித்தலை முதன்மையாகக் கொண்டு இத்துறை

தோற்றுவிக்கப்பட்டுள்ளதால், பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வருவாய்த் துறை போன்ற பல்வேறு துறைகளில் இருந்து நன்கு அறிவார்ந்த அனுபவம் பெற்ற அலுவலர்களைக் கொண்டு இத்துறை வலுப்படுத்தப்பட்டுள்ளது.

**3. கண்காணிப்பு:**

**3.1** எந்த ஒரு திட்டமானாலும் அது எவ்வாறு செயல்படுகிறது என்பதை உறுதிபடுத்தவும், பண்படுத்தப்பட்ட திட்டத்தினை வழங்குவதற்கு உதவவும், அத்திட்டத்திற்கு தொடர்ச்சியான ஆதரவினை அளிப்பதற்கு கண்காணித்தல் என்பது மிகவும் அவசியம்.

கண்காணிப்பு என்பது திட்டங்களின் திறம் குறித்த பின்புல அறிக்கையினை வழங்கவும், திட்டத்தின் நோக்கம் நிறைவேறுவதையும், அவ்விதம் செயல்படுத்துவதில் ஏற்படும் தடைகளை சரி செய்வதும், நடைமுறையில் ஏற்படும் பிரச்சனைகளை தீர்ப்பதும் ஆகும்.

மேலும், தொடர் கண்காணிப்பு என்பது ஒரு திட்டத்தின் குறிக்கோள் எந்த அளவு வரை எட்டப்பட்டுள்ளது என்பதைக் கண்காணிப்பதில் கவனம் செலுத்தி திட்டமிட்ட விவரங்களை சேகரிப்பதற்கும், அத்திட்டத்தினை செயல்படுத்தும் போதே பகுத்தாய்வு செய்யவும் விவரங்களை பகுக்கவும் வழிவகை செய்கிறது.

### 3.2 சிறப்புத் திட்டங்களை கண்காணித்தல்:

இம்மாநிலம், சமூக பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கும், மக்களின் தேவைகளை கண்டறிவதற்கும் இந்த அரசு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்தும், அத்திட்டங்களை பல தொடர்புடைய துறைகள் மூலமாக செயல்படுத்தியும் வருகிறது. இத்திட்டங்கள் மக்களின் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் கருத்திற்கொண்டு மிகுந்த கவனத்துடன் உருவாக்கப்படுகின்றன. மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதில் இத்திட்டங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இத்திட்டங்களின் செயல்பாட்டினை கண்காணிக்கும் பெரும் பொறுப்பு, சிறப்புத் திட்டச்

செயலாக்கத் துறையைச் சாரும். எனவே இத்துறை, பிறதுறைகளிடமிருந்து காலமுறையிலான முன்னேற்ற விவரங்களை பெறுவதற்கு உரிய தகவல் தொழில்நுட்ப கருவிகளைக் கொண்டு, முழுமையான இணையதள அமைப்பு முறையினை உருவாக்கி செயல்படுகிறது.

## 3.3 சிறப்பான கண்காணிப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட தொழில்நுட்ப முறைகள்:

முழுமையான மற்றும் மிகச் சிறப்பான கண்காணிப்பு அமைப்பினை மேற்கொள்வதற்காக சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை பின்வரும் தொழில்நுட்ப முறைகளை வகுத்துள்ளது:–

### அ. அறிவிப்புகளைக் கண்காணித்தல்:

மேதகு ஆளுநர் உரை மற்றும் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் அறிவிப்புகள்,

சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர்களின் அறிவிப்புகள், மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் போன்றவற்றின் செயலாக்கத்தை இத்துறை கண்காணிக்கின்றது. இத்துறையால் வடிவமைக்கப்பட்டு தலைமைச் செயலகத்தின் உள்வலைய தளத்தில் (intranet) நிறுவப்பட்ட பயன்பாட்டிற்கு எளிதான மென்பொருள் மூலமாக இவ்வறிவிப்புகளின் முன்னேற்றங்களை சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து உடன் நிகழ் (online) முறையில் பெற்று இத்துறை உடனுக்குடன் பதிவு செய்து கண்காணிக்கிறது. இப்பணி சிறப்புற நடைபெற அதற்கென ஒவ்வொரு துறையிலும்

நியமிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு அலுவலர்கள் தங்கள் துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து அறிவிப்புகளின் முன்னேற்றத்தை மேற்குறிப்பிட்ட மென்பொருள் மூலமாக பதிவு செய்கின்றனர்.

அவ்வப்போது கணினி நேரடித் தொடர்பில் வழங்கப்படுகின்ற முன்னேற்ற அறிக்கையின் அடிப்படையில் அறிவிப்புகளின் செயல்பாட்டு நிலை குறித்த விவரங்கள் அரசுக்கு காலமுறையில் வழங்கப்படுகின்றன. தகவல்களின் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டு உயர்நிலை சீராய்வுக் கூட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகையிலான கண்காணிப்பு என்பது, திட்டங்களின் செயாக்கத்தினை உறுதிச் செய்யவும் புதிய திட்டங்களை முடிவு செய்யவும் அரசால் ஏற்கனவே

உள்ள திட்டத்தில் மாற்றங்களை செய்திடவும் உதவுகிறது.

**ஆ. அரசின் முதன்மைத் திட்டங்களை கண்காணித்தல்:**

மகளிரின் கடின உழைப்பினை எளிமைப்படுத்துவதற்காக விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கல், வெண்மைப்புரட்சி உருவாக, கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு கறவை பசு, வெள்ளாடு/செம்மறி ஆடுகள் வழங்கல், மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த மடிக்கணினி வழங்கல், ஏழைகளின் ஆரோக்கியத்தைக் காத்திட முழுமையான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்,

தேவையுள்ள மற்றும் வறிய மகளிருக்கு திருமண உதவித் திட்டம், முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் போன்றவை இந்த அரசால் செயல்படுத்தப்படும் முதன்மைத் திட்டங்களாகும். பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகின்ற இத்திட்டங்களை தொடர் கண்காணிப்பு செய்யும் பொறுப்பு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறை, இத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்த குறிப்பிட்ட கால இடைவெளியில் அறிக்கையினை பெற்றிட பிற துறைகளுடன் தொடர்பு கொள்கிறது. இத்துறையில் அதற்கென உள்ள அர்ப்பணிப்புமிக்க

அலுவலர்களால் அவ்வறிக்கைகள் சேகரிக்கப்பட்டு சீராக தொகுக்கப்படுகின்றன. இந்த முன்னேற்ற அறிக்கைகள் ஆய்வுக் கூட்டங்களுக்கு அடிப்படையாக அமைகின்றன.

**இ. உயர்நிலை கண்காணிப்புக் குழு:**

அரசின் சிறப்புத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் ஒரு உயர்நிலைக் கண்காணிப்புக்குழு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:—

## உயர்நிலை கண்காணிப்புக் குழுவின் அமைப்பு

| வ. எண் | அலுவலரின் பதவி | நிலை |
|---|---|---|
| 1 | அரசு தலைமைச் செயலாளர் | தலைவர் |
| 2 | அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை | உறுப்பினர் |
| 3 | அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | உறுப்பினர் – செயலர் |
| 4 | தொடர்புடைய துறைகளின் அரசு முதன்மைச் செயலாளர்கள்/ செயலாளர்கள் | உறுப்பினர்கள் |

தேவையான அதிகாரங்களுடன் இந்த உயர்நிலை கண்காணிப்புக் குழு முதன்மைத் திட்டங்கள் குறித்த விவரங்களை சேகரிக்கவும், அவை குறித்த பிரச்சினைகளை தீர்க்கவும் ஒரு முக்கியமான அமைப்பாக அமைந்துள்ளது. பொதுவாக மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்படும் உயர்நிலை கண்காணிப்புக் குழுவின் கூட்டங்களில் குறிப்பிட்ட திட்டங்களின்

ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அவற்றின் நடைமுறை நிலை, எதிர்கொள்ளும் இடையூறுகள் மற்றும் பிரச்சினைகள் போன்றவை ஆழமாக ஆராயப்பட்டு பரிந்துரைகளும், முடிவுகளும் உடனுக்குடன் கண்டறியப்பட்டு அம்முடிவுகள் அவ்வப்போது முறையாக செயல்படுத்தப்படுகின்றன

**.ஈ.மாவட்டங்களில் ஒருங்கிணைப்பு அலுவலர்கள்:**

முதன்மைத் திட்டங்களின் செயல்பாட்டினை மாவட்ட அளவில் கண்காணிப்பதற்கென மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் போன்ற உயர் அலுவலர்கள் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக மாவட்ட ஆட்சியர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஒருங்கிணைப்பு

அலுவலர்கள் பிற அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றவும், அவ்வப்போது பின்புல தகவல்களைப் பெற்றிடவும் மாவட்டங்களில் மையப் பொறுப்பாளர்களாக செயல்பட்டு வருகின்றனர். இத்துறையின் அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ளும்போது மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்களும் உதவியாக உள்ளனர்.

**உ. கள ஆய்வுகள்:**

அரசின் பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த தகவல்களையும், அத்திட்டங்களின் திறம் குறித்த பின்புல அறிக்கைகள் பெறவும் இத்துறையின் அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொண்டு ஆய்வறிக்கைகளை அரசுக்கு

சமர்ப்பிக்கின்றனர். ஒரு திட்டம் திட்டமிட்டபடி நடைபெறுவதை இத்துறையின் கண்காணிப்பு பணி உறுதிசெய்கிறது. இத்திட்டத்தின் தேவைகளை கணிக்கவும், குறிக்கோளினை எய்தவும் இதன் மூலம் ஏதுவாகிறது. கள ஆய்வின் முடிவுகள் திட்டத்தினை மேலும் வலுவூட்டவும், செயல்திறனை செறிவூட்டவும் உதவுகின்றன.

## 3.4. கண்காணிப்பு அலுவலர்கள்:

அரசு செயலாளர்கள்/ சிறப்பு செயலாளர்கள்/கூடுதல் செயலாளர்கள் நிலையில் மாவட்ட அளவில் கண்காணிப்பு அலுவலர்களாக அரசு நியமித்து ஆணை பிறப்பித்துள்ளது. இந்த கண்காணிப்பு அலுவலர்கள், மாதந்தோறும்

மாவட்டங்களில் முதன்மையான திட்டங்களை ஆய்வு செய்து, அதில் ஏற்படும் தடைகளை நீக்கி திட்டங்களை விரைந்து செயல்படுத்த தக்க அறிவுரைகளையும், தீர்வுகளையும் மாவட்ட அலுவலர்களுக்கு வழங்குகின்றனர். இந்த கண்காணிப்பு அலுவலர்கள் முக்கியமான அம்சங்களை திட்டங்கள் வாரியாக கண்காணித்து, மாவட்ட அலுவலர்கள்/ துறைத்தலைவர்கள் எடுத்திட வேண்டிய தொடர் நடவடிக்கை பற்றியும் திட்டத்தின் மேம்பாடு மற்றும் முன்னேற்றம் குறித்த பரிந்துரைகள் இருப்பின் அவற்றையும் துறைத் தலைவர்களுக்கும் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலர்களுக்கும் அறிக்கையாக அளிப்பர். கண்காணிப்பு அலுவலர்களால் அளிக்கப்படும் அறிக்கைகள்

இத்துறையில் ஒருங்கிணைக்கப்பட்டு பின்புலத் தகவல்கள் தலைமைச் செயலாளர் வழியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்படுகின்றது.

**4. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

அரசின் சிறப்புத் திட்டங்களை கண்காணிப்பதுடன், கீழ்க்கண்ட இரண்டு முதன்மைத் திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பும் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது:–

(i) மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கல் மற்றும்

(ii) மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கல்

## 4.1 மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கல்:

விரிவான சத்துணவுத் திட்டத்தை முதன்முறையாக அறிமுகம் செய்த மாநிலமான தமிழ்நாடு, பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்துவதிலும், இடைநிற்றலை குறைப்பதற்காகவும், பல்வேறு திட்டங்களை கொண்டு வந்ததில் முன்னோடியாக எப்போதும் உள்ளது. அரசால் நடத்தப்பெறும் மற்றும் உதவி அளிக்கப்பெறும் பள்ளிகளில் பயிலும் சிறார்களுக்கு விலையில்லா சீருடையும், பாடபுத்தகங்கள் மட்டுமல்லாமல், 10, 11 மற்றும் 12ம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் அவர்களது பள்ளிக் கல்வியை நிறைவு செய்வதற்காக ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு ஒரு முன்னோடிப் புதுமைத் திட்டமாக மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கி வருகின்றது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இளைஞர்களுக்கு அவர்களது வளரும் பருவத்திலேயே சமீபத்திய தொழில்நுட்ப வளர்ச்சியை அறிமுகப்படுத்த வேண்டும் என்னும் நோக்கில் புதிய புரட்சிகர திட்டமாக மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். இந்த மடிக்கணினி திட்டம் அறிவு அடிப்படையிலான வாய்ப்புகள் கொண்ட ஒரு புதிய உலகத்தினை ஒட்டுமொத்த மாணவச் சமுதாயத்திற்கு திறந்து விடுகின்றது.

விலையில்லா மடிக்கணினி வழங்கும் இத்திட்டம், 2011–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 அன்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவின்போது, திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு பயனளிக்கின்ற திட்டமாக மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் நாட்டிலேயே முதல்முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் இத்திட்டத்தினால், தமிழ்நாட்டு மாணவர்கள் நன்கு தகுதிபெற்ற மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் இளைஞர்களாக உருவாவதுடன், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதன் தொடர்புடைய துறைகளில் உலக அளவில் நேரடியாக வேலைவாய்ப்பினை பெற்றிட வழிவகுக்கிறது.

கடந்த **2011–12** மற்றும் **2012–13** ஆகிய இரண்டாண்டுகளில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு இப்பயன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**2013–14**ம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாண்டு படிக்கும் மாணவர்களும் இத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து பயன்பெற்று வருகின்றனர்.

## ஆண்டுவாரியாக மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

| ஆண்டு | பள்ளிகள் | கலை/ அறிவியல் கல்லூரிகள் | பொறியியல் கல்லூரிகள் | தொழில் நுட்பக் கல்லூரிகள் |
|---|---|---|---|---|
| 2011–12 | 12–ம் வகுப்பு | முதல்(ம) மூன்றாம் ஆண்டு | இரண்டாம் (ம) நான்காம் ஆண்டு | முதல் (ம) மூன்றாம் ஆண்டு |
| 2012–13 | 12–ஆம் வகுப்பு | மூன்றாம் ஆண்டு | இரண்டாம் (ம) நான்காம் ஆண்டு | முதல் (ம) மூன்றாம் ஆண்டு |
| 2013–14 முதல் | 12–ஆம் வகுப்பு | – | – | முதலாண்டு |

மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் ஒரு மாபெரும் வெற்றித் திட்டமாகும். தமிழகத்தில் முதலில் தொடங்கப்பட்டு பின்னர் நாட்டின் பிறபகுதிகளில் எடுத்தாளப்பட்ட பல்வேறு முன்னோடித் திட்டங்களைப்போன்றே இத்திட்டமும் பிற மாநிலங்களால் ஏற்று நடத்தப்பட்டு வருகிறது.

இன்றைய உலகில் அனைத்து மாணவர்களுக்கும் கணினி இன்றியமையாததாக உள்ளது. அனைத்து மாணவர்களாலும் தங்களது சொந்த நிதி ஆதாரங்களை கொண்டு தமக்கென ஒரு தனி கணினி வாங்கிட இயலாது. விரைந்து வளர்ந்துவரும் வேலைவாய்ப்பு சூழலில் சமூகத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள மாணவர்கள்

தனித்தகுதி பெற்றிட வேண்டும். தகவல் தொழில்நுட்பத்தில் உள்ள இடைவெளியைக் குறைப்பதற்காகவும், அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்குவதற்காகவும், மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் புதுமையான திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. வசதியற்றவர்களுக்கு “கணினிக் கல்வியை” எடுத்துச் சென்று அவர்கள் சம வாய்ப்பினை அடைய அரசு வழியமைத்துள்ளது.

இத்திட்டத்திற்காக மடிக்கணினிகள் கொள்முதல் செய்யும் பணி ‘எல்காட்’ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மடிக்கணினிகள் தொடர்புடைய துறைகளான பள்ளிக்கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகங்கள்

மூலமாக 2011–12 மற்றும் 2012–13 ஆகிய ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்டன. 2013–14ம் ஆண்டு முதல் பள்ளிக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் விநியோகம் செய்யப்படுகின்ற மடிக்கணினிகளில், அளிக்கப்படும் மென்பொருள் தொகுப்பில் “Windows” தொடக்கநிலைப் பதிப்பு, LINUX அடிப்படையில் அமைந்த “Bharath Operating System Solution” (BOSS), அகராதி, திருக்குறள், பல்வேறு பாடங்களுக்கான பாடத்திட்டங்கள் முதலியன சேர்த்து வழங்கப்பட்டுள்ளது. பார்வை திறன் அற்றவர்களுக்கு

வழங்கப்படும் மடிக்கணினிகளில் அவர்கள் பயன்படுத்தும் வகையில் சிறப்பு மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது. மடிக்கணினிகள் உயிர்ப்பிக்கப்பட்டவுடன் அரசின் சின்னம் காட்சியளிக்கும்படி மடிக்கணினி வழங்குநர்களால் வடிவமைக்க அரசால் உறுதி செய்யப்படுகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் பெரும்பான்மையான மாணவர்கள் முதல்முறையாக நேரடியாக கணினியில் பயிற்சி பெறும் வாய்ப்பு கிடைத்துள்ளதால் இத்திட்டம் இம்மாணவர்களுக்கு உண்மையான மகிழ்ச்சியை அளித்துள்ளது.

மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல் என்ற உயரிய முடிவு நவீன தொழில் நுட்பத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதாகவும், அவர்களுடைய எதிர்காலத்தை திட்டமிடுவதற்கும் உதவுகிறது. இப்போது வழங்கப்படுகின்ற உள்கட்டமைப்பைக் கொண்டு மாணவர்கள், அடிப்படையிலான அலுவலகப் பயன்பாட்டு மென்பொருள்களை விரைவாக கற்றிடலாம்.

இந்த மடிக்கணினிகளுக்கு, அதனில் உள்ள மின்சேமிப்பு கலன் ஆகியவற்றிற்கு ஒரு வருட உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளன. இந்த மடிக்கணினிகள் நன்கு உழைத்திடவும் அவை ஒழுங்காக பராமரிக்கப்படவும் அனைத்து

மாவட்டங்களிலும் தொடர்புடைய நிறுவனங்கள் மூலம் சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வசதிகள் குறித்து மாணவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் இந்த நிதியாண்டிலும் தொடரப்படுவதன் வாயிலாக 5.50 இலட்சம் மாணவர்கள் 2014–15ம் ஆண்டில் பயன்பெற உள்ளனர். அதற்கென நிதிநிலை அறிக்கையில் ரூ.1100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.2 மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கல்**

பொருளாதார அடிப்படையில், மேலும் வளம்பெற மகளிர்க்குத் தேவையான சாதனங்களை வழங்கி

அவர்களது வீட்டுப் பணிகளை எளிதாக்கி வசதியுறச் செய்வது அவசியமானதாகும். எனவே, அரிசிபெறத் தகுதியுள்ள குடும்ப அட்டை பெற்றுள்ள அனைத்து குடும்பங்களிலும் உள்ள மகளிர்க்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் ஆகியவற்றை ஒரு தொகுப்பாக வழங்கும் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்களை பயனாளிகளுக்கு வழங்கும் திட்டம், **2011**–ம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் **15**ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், திருவள்ளூர் மாவட்டம் காக்களூரில் தொடங்கி வைக்கப்பட்டது.

மலைப்பகுதிகளில் மின்விசிறிகள் அதிக அளவில் பயன்படாது என்பதை கருத்திற்கொண்டு நீலகிரி மாவட்டத்திலும், திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலைப்பகுதியிலும் மின்விசிறிக்குப் பதிலாக மின்காந்த அடுப்பு (Induction Stove) வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மகளிரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன், அவர்களுக்கு நவீன வீட்டு உபயோக சாதனங்களை அளித்து அவர்களுக்கு சமவாய்ப்பு வழங்குவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**30.06.2011** அன்றுள்ள நிலையில் அரிசி பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டை வைத்துள்ள

ஏறத்தாழ 1.85 கோடி குடும்பங்களில் உள்ள மகளிர் படிப்படியாக இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவர்.

இந்தப் பொருட்கள் தகுதியுடைய குடும்பங்களில் உள்ள மகளிருக்கு வழங்கப் படுகின்றன. அரிசி பெறத்தகுதியுள்ள குடும்ப அட்டையில் பெண் குடும்ப உறுப்பினர் எவரும் இல்லாத நிலையில், அந்த குடும்பத் தலைவரிடம் இப்பொருட்கள் வழங்கப்படும். இவை முதலில் ஊரகப் பகுதிகளில் வழங்கப்பட்டு பின்னர் முறையே பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் என படிப்படியாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தை விரைவாகவும், நல்ல முறையிலும் செயல்படுத்த ஏதுவாக அரசு, வருவாய்த் துறையில் ஒவ்வொரு

மாவட்டத்திலும் கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்திற்காக மின்விசிறிகள், மிக்சிகள் மற்றும் கிரைண்டர்கள் கொள்முதல் மற்றும் வழங்கல் பணி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சாதனங்கள் ஒவ்வொரு சட்டசபை தொகுதியிலும் உள்ள கிடங்கிற்கு நேரடியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் அனுப்பி வைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அனைத்து வீட்டு உபயோக சாதனங்களும் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

சென்னையில் மாநகராட்சி ஆணையரின் கட்டுப்பாட்டிலும், பிற மாவட்டங்களில் வருவாய்த்

துறை மூலம் மாவட்ட ஆட்சியர்களின் பொறுப்பிலும் இச்சாதனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சாதனங்கள் சரியான முறையில் செயல்படுவதை உறுதி செய்வதற்காக பொருட்கள் அளிக்கும் நிறுவனங்கள் மூலம் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கும் மையங்கள் அனைத்து மாவட்டங்களிலும் அமைத்திட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வசதிகள் குறித்து பயனாளிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சாதனங்களுக்கு இரண்டு வருட உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

**2011–12ம் ஆண்டில் 25 இலட்சம்** பயனாளிகளுக்கு இச்சாதனங்கள்

வழங்கப்பட்டுள்ளன. 2012–13 மற்றும் 2013–14–ம் ஆண்டுகளில் தலா 35 இலட்சம் பயனாளிகள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றுள்ளனர்.

மின்விசிறிக்குப் பதிலாக வழங்கப்படும் மின்காந்த அடுப்பு, 2011–12, 2012–13 மற்றும் 2013–14 ஆகிய ஆண்டுகளில் முறையே 34,000, 54,000 மற்றும் 47,646 மின்காந்த அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 2014–15ம் ஆண்டில் இத்திட்டம் தொடரப்படுவதன் மூலம் கூடுதலாக 35 லட்சம் பயனாளிகள் பயன்பெறுவர். இதற்கென இந்த நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ரூ. 2000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.3 நிறுவன வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning - ERP):

இந்தத் துறையால் செயல்படுத்தப்படும் இரண்டு திட்டங்களான மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கல் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கல் ஆகியவற்றின் கீழ் வழங்கப்படும் பொருட்கள் மக்களுக்குச் சென்றடைதலைக் கண்காணிக்க நிறுவன வளத் திட்டமிடல் குறித்த ஒரு மேம்படுத்தப்பட்ட மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவன வளத் திட்டமிடல் மென்பொருள் ஒரு மேலாண்மை மென்பொருளாகும். இம்மென்பொருள் ஒருங்கிணைந்த பயன்பாட்டின் வாயிலாக

தொழிலினை நிர்வகிக்க உதவுகிறது. இந்த நிறுவன வளத் திட்டமிடல் மென்பொருள், பொருட்கள் வாங்குதல், வழங்குதல் மற்றும் விநியோகித்தல் போன்ற அனைத்து அம்சங்களையும் ஒருங்கே உள்ளடக்கிய ஒரு மென்பொருளாகும். இந்த இரண்டு திட்டங்களுக்காக மட்டுமே இந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் ‘எல்காட்’ நிறுவனத்தாராலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாராலும் முறையே மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் மற்றும் மகளிருக்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கும் திட்டம் ஆகிய இரு திட்டங்களில் பயன்படுத்தப் படுகிறது.

## 5. நிறைவுரை

வறியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அனைவரும் அனைத்தும் பெறவும், பிறரை சாராமல் வாழவும், பொருளாதார ரீதியாக மக்கள் முன்னேற்றம் பெறவும் இத்தகைய நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, செம்மையாக செயல்படுத்தி வருவதை "பொருளாதாரத்தை நன்கு அறிந்தவர்கள் இலவசத் திட்டங்கள் என்று சிறுமைப்படுத்தமாட்டார்கள்" என நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் தளராத அர்ப்பணிப்பு, நீடித்த பொறுப்புணர்வு மற்றும் இலக்கு

நோக்கிய ஆர்வத்துடன், திறன்மிக்க கண்காணிப்பின் வாயிலாக ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் இத்துறை செயலாற்றி வருகின்றது.

**கே.டி. ராஜேந்திரபாலாஜி**
**செய்தி மற்றும் சிறப்புத் திட்டச்**
**செயலாக்கத் துறை அமைச்சர்**

## மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்குதல் – 2014–15




2014–15 –ல் மதிப்பிடப்பட்ட மொத்த மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 5,49, 979




2014–15 –ல் வழங்கப்படவுள்ள மடிக்கணினிகள்
மாவட்ட வாரியான மொத்த பயனாளிகள்
இத்திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 5.50 இலட்சம்
பயனாளிகளின் எண்ணிக்கை
70000
60000
50000
40000
30000
20000
10000
0
4550
5317
6762
7047
10206
10702
10780
11742
12620
13103
13134
14090
14102
14452
14532
14962
15672
16898
18131
20617
21178
21323
21429
22169
23229
24726
25142
25260
25973
27007
28352
34772
பெரம்பலூர்
நீலகிரி
அரியலூர்
கரூர்
சிவகங்கை
இராமநாதபுரம்
தேனி
நாமக்கல்
திருவாரூர்
தூத்துக்குடி
நாகப்பட்டினம்
திண்டுக்கல்
தர்மபுரி
புதுக்கோட்டை
திருப்பூர்
ஈரோடு
கிருஷ்ணகிரி
கன்னியாகுமரி
விருதுநகர்
தஞ்சாவூர்
திருவண்ணாமலை
திருவள்ளூர்
கடலூர்
கோயம்புத்தூர்
மதுரை
திருச்சிராப்பள்ளி
திருநெல்வேலி
விழுப்புரம்
காஞ்சிபுரம்
சேலம்
சென்னை
வேலூர்
மாவட்டங்கள்


மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கல்
மாவட்ட வாரியான மொத்த பயனாளிகள்
இத்திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 1.85 கோடி
பயனாளிகளின் எண்ணிக்கை
2500000
2000000
1500000
1000000
500000
0
பெரம்பலூர் 152984
அரியலூர் 212223
நீலகிரி 218003
கரூர் 278105
திருவாரூர் 325429
சிவகங்கை 360875
இராமநாதபுரம் 366788
தேனி 373397
தர்மபுரி 393771
புதுக்கோட்டை 401608
நாமக்கல் 419318
நாகப்பட்டினம் 424739
தூத்துக்குடி 436359
கிருஷ்ணகிரி 440539
திருவள்ளூர் 489806
விருதுநகர் 505253
கன்னியாகுமரி 515022
திண்டுக்கல் 580299
காஞ்சீபுரம் 584448
ஈரோடு 612587
தஞ்சாவூர் 624804
திருப்பூர் 634999
திருவண்ணாமலை 641255
கடலூர் 641621
திருச்சிராப்பள்ளி 715699
மதுரை 774015
திருநெல்வேலி 798503
சேலம் 849915
விழுப்புரம் 897565
வேலூர் 907448
கோயம்புத்தூர் 977021
சென்னை 1930410
மாவட்டங்கள்


திருச்சிராப்பள்ளி மாவட்டம்
ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதி